யோகாஸன ஆலய விஜயம்

மலர் 31	காளயுக்தி ஆண்டு கார்த்திகைத் திங்கள் November—1978	இதழ் 11

மேற்கொள்ள லாவதோர் மெய்த்தவம் ஒன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்த்தாளும் ஒன்றுண்டு
மேற்கொள்ள லாவதோர் மெய்ந்நெறி ஒன்றுண்டு
மேற்கொள்ள லாம்வண்ணம் வேண்டிநின் றோருக்கே,

உயிர்கள் படிப்படியாக பக்குவப்பட்டு இறுதியாக மேற்கொள்ளத்தக்க அழிவற்ற தவம் ஒன்றுண்டு. அத் தவமாவது ; சீலம் (சரியை) நோன்பு (கிரியை) செறிவு (யோகம்) அறிவு (ஞானம்) எனப்படும். இத் தவவாயிலாக அடையப்பெறும் திருத்தாளும் ஒன்றுண்டு. அத் திருவடியைப் பொருந்தும் அறிவினுள் அறிவாம் மெய்ந்நெறியும் ஒன்றுண்டு. அதைப்பற்றுவதற்கு வேட்கை கொள்பவர் சிவத்துக்கு உரிமையுடையவராகின்றனர். அந் நல்லோர்க்கு அனைத்தும் எளிதாகவும் இனிதாகவும் கை கூடும், —திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4—00	ரூ. 6—00	ரூ. 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 80—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

பொன் மொழிகள்

ஒரு மனிதனுடைய எண்ணத்துக்கும் நோக்கத்துக்கும் தக்கபடி அவனுக்குச் சன்மானம் கிடைக்கின்றது. ஈசுவரன், பக்தர்கள் விரும்புவன வற்றை யெல்லாம் கொடுக்கும் கற்பக விருட்சம் போன்றவன். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

கடவுள் நம்முடைய கற்பனை சிருஷ்டி என்று கருதுகிறார்கள். அவர்களுடைய கருத்து உண்மை என்றால், அப்புறம் உலகத்தில் எதுவுமே உண்மையன்று!

மகாத்மா காந்தியடிகள்.

உயர்திரு கோ மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

மனம், வேண்டுதல் வேண்டாமையற்ற நிலையில் பற்றற்றிருக்கிறது. பற்றற்ற மனமே இறைவனுக்கு இருப்பிடமாதலால் இறைவனைத் தம்முள்ளே உணர்கின்றனர்.

திருமதி சாவித்திரி செல்வராஜன்

கார்த்திகைப் பௌர்ணமி தீப விழா அழைப்பு!

பேரன்புடையீர்!

14—11—78 வியாழனன்று மாலை 5-30 மணிக்கு நடைபெறவிருக்கும் இப் பெருவிழாவினை யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் திருவிளக்கேற்றித் தொடங்கிவைக்க அன்போடு இசைந்துள்ளார்கள். 5-30 முதல் மணி வரை யோகாசன ஆலய மகளிர் இசைப் பிரிவு குழுவினரால் அருளிசையும், 7 முதல் 7-15 வரை, திருவிளக்கேற்றல், ஓங்காரக் கொடி ஏற்றம், பிரார்த்தனை ஆகியவை நடைபெறும். 7-15க்கு யோகாசன ஆலய விஜயத்தினின்றும் மணிக் கருத்துக்கள் வாசித்த பின்னர், 7.30 முதல் 8 மணி வரை தியானம் (மௌனப் பிரார்த்தனை) கடை பிடிக்கப்பட்டு பிரார்த்தனையுடன் விழா நிறைவு பெறும்.

ஒளி விளக்குகளின் ஒளி மயமான திருக்காட்சியினைக் கண்டு களித்து இறையருளுக்குப் பாத்திரராவதற்குத் திரளாக வாரீர்! வாரீர்! என அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபம் (சென்னை தண்டையார்பேட்டை காவல் நிலையம் அருகில்) 194, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை சென்னை.

J. ஹரிஹரகிருஷ்ணன்,
(ஆடிட்டர், யோ. ஆ.)
விழா அமைப்பாளர்.

J. வேங்கடேசுவரன்,
செயலர், பௌர்ணமி வகுப்பு

யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்களுடன் கடிதத் தொடர்பு கொள்வோர், எண் 85, தொப்பை முதலி தெரு, இராயபுரம், சென்னை-600 013 என்ற முகவரிக்கு எழுதவும்.

—ஆசிரியர்,

மகரிஷி தாயுமானவர்

ஆசையெனும்

திரு. கோ. மு. சுவாமி அவர்கள்

நிகழ்த்திய உரை விளக்கம்.

உலக மாயையி லேயெளி யேன்றனை
யுழல விட்டனை யே; உடை யாய்! அருள்
இலகு பேரின்ப வீட்டினி லென்னையும்
இருத்தி வைப்பதெக் காலம்? சொ லாய்! எழில்
திலக வாணுதற் பைந்தொடி கண்ணிணை
தேக்க நாடகஞ் செய்தடி யார்க்கெலாம்
அலகி லாவினை தீர்க்கத் துசங்கட்டும்
அப்ப னே!அரு ளானந்தச் சோதியே!

பதவுரை

எழில் - அழகு வாய்ந்த, திலகம் - பொட்டணிந்த, வாள் - ஒளி பொருந்திய, நுதல் - நெற்றியையும், பை - பசிய, தொடி - வளையலையு முடைய உமாதேவியின்; கண் இணை - இரு விழிகள், தேக்க - நிறை யும்படி, நாடகஞ் செய்து - நிருத்தஞ் செய்து; அடியார்க்கு எல்லாம் - அடியவர்கட்கு எல்லாம், அலகு இல்லா - அளவற்ற, வினை தீர்க்க - கன்மங்களை யொழித்தற்காக, துசம் கட்டும் - கொடி கட்டுகின்ற, அப்பனே! - தந்தையே!, அருள் - அருளையும், ஆனந்தம் - ஆனந்தத் தினையுமுடைய, சோதியே! - சுடரே!, எளியேன் தனை - ஏழையேனை, உலக மாயையிலே - பிரபஞ்ச மாயையிலே, உழலவிட்டனையே - அலையவிட்டனையே; உடையாய் - என்னை அடிமையாக வுடையாய்!, அருள் இலகு - உன் திருவருளால் விளங்குகின்ற. பேர் இன்ப வீட்டி னில் - மோட்ச வீட்டினில், என்னையும் - அடியேனையும், இருத்தி வைப்பது - இருக்கச் செய்வது, எக்காலம் - எந்நாள்? சொல்லாய் - பேசுவாயாக!. என்க.

கருத்துரை

முகுமிகு பொட்டணிந்த ஒளி பொருந்திய நெற்றியை யுடைய வரும், பசுமையயான வளையலணிந்தவருமான உமையம்மையின் இரு விழிகள் நிறையுமாறு நடித்து, அடியவர்கட்கெல்லாம் அளவற்ற கன் மங்களை யொழித்தற்காக கொடி கட்டிக்கொள்ளும் தந்தையே! அருளையும் ஆனந்தத்தையுமுடைய சுடரே! ஏழையேனை உலக மாயையிலே அலையவிட்டனையே என்னை அடிமையாக உடையவனே! உன் திருவருளால் விளங்குகின்ற மோட்ச வீட்டினில் அடியேனையும் இருக்கச் செய்வது எந்த நாள்? சொல்வாயாக! என்பதாகும்.

விரிவுரை

முன்பாடலில் தாயுமான அடிகளார், பரஞ்சோதியாகிய இறைவன் தமிழ் மாலை தொடுப்பவரைச் சோதிக்காமலும், கொடையாளரிடத்துக் குறை வையாமலும், யான் எனும் அகந்தை அகற்றியவரிடத்தினின்று நீங்காமலும் உள்ளன்போடு தன்னை நாடுபவர்க்கு இரக்கங் காட்டியும் அருள்வான் என்றார். இப் பாடலில், தன்னில் ஒருகூறாகிய சத்தியின் கண்கள் களிக்குமாறு நடிக்கும் பாம்பொருளை விளித்து, இதயக் குகையில் உன்னை உடையவர்களாகிய அடியார்களின் வினைகளைத் தவிர்த்தற் பொருட்டு கொடிகட்டிக்கொண்ட பரம்பொருளே! உன் அடியவனாகிய ஏழையேனை உலகமெனும் பெரும் மாயையிலே அகப்பட்டு உழலச் செய்தனையே! உன் திருவருளாம் இன்ப வீட்டினில் அடியேனையும் குடியிருக்கச் செய்வது எக்காலம் ஐயா! என்கின்றனர்.

சத்திக்குப் பெண்பாலும் சிவத்துக்கு ஆண்பாலும் வகுத்துள்ளனர் சான்றோர். இரண்டையும் இணைத்து சிவசக்தி அல்லது அம்மையப்பன், அர்த்தநாரீசுவரன் என்றெல்லாம் திருநாமமும் சூட்டியிருக்கின்றனர். சிவமாம் பரம்பொருள் ஆடும் திருக்கூத்தினை எஞ்ஞான்றும் உடனிருந்து காணும் பேறு பெற்றவள் சக்தியாவள். இமைக்காமல் காணும் அச் சக்தியை "திலக வாணுதல் பைந்தொடி" என்கிறார் அடிகளார்.

திலகம் என்பதற்குப் பொட்டு என்று பொருள். அழகுக்கு அழகு செய்வது பொட்டாகும். நெற்றியின் புருவத்தினிடையில் இடப்படுவது இப்பொட்டு. மங்கல மகளிர் கண்ணாடிமுன் நின்று வண்ண வண்ண பொட்டிட்டு அழகு பார்ப்பர். ஆடவரில் பலரும் குங்குமப் பொட்டு சந்தனப் பொட்டு வைத்துப் பார்ப்பர். வெளியுலக பார்வைக்காக இட்டு மகிழ்வது இப்பொட்டு. உள்ளுலகப் பார்வைக்காகவும் பொட்டிடுவதுண்டு! ஞான ஆசிரியர் மாணக்கரின் புருவ மத்தியில் பொட்டிட்டுச் சுட்டிக் காண்பிப்பர். அங்ஙனம் சுட்டிக் காண்பிக்கப்பட்ட கண்+நாடியில் அவரவர் அழகைக் காண்பதே சாதனையாகும். ஒவ்வொரு கோவில்களிலுமுள்ள உற்சவமூர்த்திகளுக்கும் மணமிகுந்த ஜவ்வாது பொட்டு இடப்படுவதும் நாம் சிந்திக்கற்பாலது.

பதினெண் சித்தரில் ஒருவரான அழுகணி சித்தர் என்பார் தன் குருநாதன் தனக்குப் பொட்டுவைத்துப் பொய் வேடத்தைக் கலைத்து மெய் வேடத்தைக் காண்பித்ததாகக் கூறுகின்றார்;

"சாயச் சரக்கெடுத்தே சாதிலிங்கம் தான்சேர்த்து
மாயப் பொடிகலந்து வாலுழுவை நெய்யூற்றி

பொட்டென்று பொட்டுமிட்டான் புருவத் திடைநடுவே
இட்ட மருந்தாலே என் கண்ணம்மா
இவ்வேட மானேண்டி''

ஆசிரியர் சுட்டிக்காட்டிய பொட்டின் நடுவிலேயே பார்த்திருந்ததால் புறநாட்டமாகிய மற்றவற்றை மறந்தார். பொய்வேடங் கலந்து மெய் வேடமே வெளிப்பட்டது. அதனை 'இவ்வேட மானேண்டி' என்றார். தாயுமான அடிகளாருக்கும் மௌனகுருவானவர் சிவஞானச் செல்வ ராய்க் காட்சி தந்து அனைத்து மெய்ந் நெறிகளையும் போதித்து குறி யளித்து சும்மா இருக்கும் நெறியினைக் கூட்டி வைத்ததாக வரும் பாடல்வழி வெளிப்படுத்துகின்றார்;

பிறியாத தண்ணருட் சிவஞானி யாய்வந்து
பேசறிய வாசியாலே
பேரின்ப உண்மையை அளித்தனை என்மனமறப்
பேரம்ப லக்கடவுளாய்
அறிவாய் இருந்திடும் நாதஒலி காட்டியே
அமிர்தப்ர வாகசித்தி
அருளினை அலாதுதிரு அம்பலமு மாகிஎனை
ஆண்டனைபின் எய்திநெறியாய்க்
குறிதான் அளித்தனைநன் மரவுரிக்கொள் அந்தணக்
கோலமாய் அசபாநலங்
கூறினபின் மௌனியாய்ச் சும்மா இருக்கநெறி
கூட்டினை எல்லாம்இருக்கச்
சிறியேன் மயங்கிமிக அறிவின்மை ஆவனோ
தேடறிய சத்தாகிஎன
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

மேற்கூறியவண்ணம் குறியிட்டு (பொட்டிட்டு)க் காண்பித்த இடத்திலேயே நிறக வேண்டும. நிற்பின்! அறிவு, அறியாமைகளாகிய பசு, பாச, ஞானங்களினின்றும நீங்கி பதிஞானம் கைவரப் பெறும். அது எந்த நாள்? என்பதை அடிகளார்,

அறிவோ டறியாமை அற்று அறிவினூடே
குறியில் அறிவுவந்து கூடும்நாள் எந்நாளோ?

என்கின்றனர். இதற்கும் மேலாக ஒருபடி ஏறினல் அந்தக் குறியும் அறவேண்டும்! அதுவே நிர்விகற்ப சமாதிக்குச் சேர்க்கும். ''குறிக ளோடு குணமேதுமின்றி'' என இதனை அடிகளார் கூறுவது காண்க!

இவ்வாறு மேலும் மேலும் அகச் சாதனையில் ஆழ்ந்து சென்ற அடிகளாரின் அனுபவம், ''கூடுதலுடன் பிரிதலற்று'' என்ற பாடல் வழி, ''நிலையான குறியற்று'' என்பதினின்றும் நமக்கு வெளிப்பட்டு நிற்கிறது, இவ்வளவு உட்பொருளையும் நாம் உணருமாறு இடப்படும் பொட்டினைச் சக்தியாகிய தேவியார் தன் ஒளி பொருந்திய நெற்றியில் அணிந்திருக்கின்றார். அவளின் நிறம் பசுமை. ஆம்! சக்தியின் நிறம் பசுமை. சாதகர்க்குப் பசுமை நிறம் தோற்றப்படில், சக்தி தரிசனம் கிடைத்ததெனப் பொருளாகும். ஒளியின் அனுபவம் கிடைத்திடினும்

அங்ஙனமேயாம், "உச்சிக்குமேல்'' என்ற கொங்கண சித்தரின் பாடல் இதற்குச் சான்ருகும். அச் சக்தியானவள் கைகளில் வளையல் அணிந்துள்ள வடிவத்தைக் காண்பிக்கிருர் அடிகளார். ஆம்! உருவம், அருவம், அருவுருவம் அன்ருே பரம்பொருள்? பலருக்கு உருவங்களாகக் காட்சி கிடைக்கப் பெற்றிருக்கின்றனர். சிவவாக்கிய சித்தர் தன் குருநாதனின் சொல்லை சிரமேற்கொண்டு அவரிடமிருந்து பெற்ற காசை, கங்கையோரம் நின்று அம்மா! என்றழைக்க, கலகலவென்ற ஓசையுடன் வளையலணிந்த கரம் தோன்றி பெற்றதல்லவா?

இவ்வனுபவங்கள் வேதத்திற் காணப்பெரு; தர்க்க வாதத்திற்குப் பொருந்தா. "வேதத்திலே தர்க்க வாதத்திலே விளங்காது விந்து நாதத்திலே அடங்காது அந்த வான்பொருள்'' என்பார் தாயுமான அடிகள்.

சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்
ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே.

என்பது திருமூலரின் திருவாக்கு. வேதமுதலான நூல்களைக் கற்று அதனுல் பிதற்றித் திரிவது ஒழித்து அதன் உட்பொருள் விளங்க ஒரு நொடிப் பொழுதாகிலும் பொட்டிட்ட இடத்தில் உள்முகமாக நோக்குங்கள். அவ்வாறு நோக்கும் நோக்கு பசுமரத்தின்கண் பதித்த ஆணி போல அசையாதிருக்க வேண்டும். அப்போது தொன்றுதொடடுத் தொடர்ந்துவரும் பிறவிப் பிணி நீங்கியோடும் என்பது இதன் கருத்தாகும்.

இத்தகையப் பார்வையால் "கூத்தனைக் கண்ட அக் கோமளக் கண்ணினள்'' என்று திருமூலரே கூறுகின்ருர். இவ்வண்ணம் காணும் கண்கள் மூன்றின் அருமையை நாம் உணர்தற் பொருட்டே இறைவனுக்கு முக்கணன் என்ற பெயரைச் சூட்டினர். மூன்று கண்களாவன: நெற்றிக் கண், உச்சிக் கண், பிடரிக் கண்கள் ஆகும். அல்லது சூரியன், சந்திரன், அக்கினி எனவும் கூறுப!

இக் கண்களால் காண்பார்க்குப் பரம்பொருளின் திருக்கூத்துத் தரிசனம் கிடைக்கின்றது! இதனை அடிகளார், "திலக வாள்நுதல் பைந்தொடி கண்ணிணை தேக்க நாடகம் செய்து'' என இப்பாடலில் கூறியுள்ளார்.

இவ்வருட் கூத்தைக் காண்பவர்பெரும் பேறு சொல்லுந் தரமன்று! என வியந்து பேசுகின்ருர் திருமூல நாயனுர்;

மாணிக்கத் துள்ளே மரகத சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறு பெற்ருரே,

இப்பாடலில் பரம்பொருள் கூத்தாடும் மன்றத்தின் தன்மையினை வெளிப்படுத்தினுர். மாணிக்கப் பேரொளி வீசும் செவ்வொளியும், மரகதப் பசுமை ஒளிமையும் கலந்த பொன்னம்பலத்தில் ஆடும் அற்புதத் திருக்கூத்தைக் கண்ட வள்ளலார், "ஆணிப்பொன் னம்பலத்தேகண்ட காட்சிகள் அற்புதக் காட்சியடி'' என்று வியந்து பார்க்

கின்ருர். வியாக்கிரபாதர் (புலிக்கால் முனிவர்) என்பார் இக் காட்சியை எப்போதும் கண்டு களித்திருக்கும் பேறு பெற்றதாகப் புராணம் கூறுகிறது.

இங்ஙனம் நடிக்கும் பெருமான் தன் அடியவர்களின் வினைத் தொகுதியை அகற்றும்பொருட்டு கொடிகட்டிக்கொண்டிருக்கின்ருனும். "அடியார்க்கெல்லாம் அலகிலாவினை தீர்க்க துசங்கட்டும் அப்பனே அருளானந்த சோதியே'' என இப்பாடலில் பரம்பொருளை விளித்துக் கேட்கின்ருர் சுவாமிகள்.

வினை யாவர்க்கும் பொது. யாவரிடத்தும் தன் வலிமையைக் காண்பித்தே தீரும். ஆனுல்! அருளாளர்கள் அதனுல் தாக்கப்பட மாட்டார்கள். மருளாளர் தாக்குண்டு துவண்டு விடுவர். உதாரணம்; பூனை தன் குட்டிகளைத் தூக்கிச் செல்லும் அதே பற்களினுல் எலிகளைக் கவ்வுவது போலவாகும்.

அருளையும் ஆனந்தத்தையும் உடைய பரம்பொருளை விளித்த அடிகளார், தந்தையே! என்னை ஏனய்யா உலகமாகிய மாயையில் அலையவிட்டாய்? ''உலக மாயையிலே எளியேன்தனை யுழலவிட்டனையே'' எனக் கேட்கின்ருர். சுத்த மாயை, சுத்தாசுத்த மாயை, அசுத்த மாயை என மாயை மூவகைப்படும். சுத்த மாயை விந்து தத்துவமும், சுத்தாசுத்த மாயை மோகினி தத்துவமும், அசுத்த மாயை மான் தத்துவமுமாம். மூன்ருவதாகிய மான் தத்துவமே சீவர்களைப் பிரபஞ்ச வாயிலாக மறைக்கிறது. மரத்தினுல் செய்யப்பட்ட யானை யுருவத்தைக் காணுங்கால் மரம் அதனுள்ளே மறைந்தும், மரத்தின் தன்மையைக் காணுங்கால் யானை யுருவும் மறைவதும்போல. உலக நினைவுகளில் ஆழ்ந்தபோது பரம்பொருளின் தன்மை மறந்தும், பரம்பொருளை நினைந்தபோது உலகமாகிய மாயை மறைந்தவாறும் திருமூலர் விளக்குகின்ருர்.

தன்னை யடுத்த நிறத்தின் தன்மையை வெளிப்படுத்தித் தன்னுடைய உண்மைத் தன்மையை இழக்கும் பளிங்குக் கல்லைப்போன்று. ஐயனே! இத்தகைய பெரிய மாயையில் எனை அழுந்தச் செய்தனையே என வேதனையுறுகின்ருர் சுவாமிகள்; ''பலநிறங் கவரும் உபலமாய்ப் பெரிய மாயையில் அழுந்தி நின்னது ப்ரசாத நல்லருள் மறந்திடும் சிறியனேனும் உனைவந்து அணைந்து சுகமாய் இருப்பது இனி என்று காண்?'' என்கிருர். அளப்பரும் வலிமை பெற்ற மாமாயையின் தன்மையினைச் சாதகர் அறிவர்!. வைகரி, மத்திமை, பைசந்தி, சூட்சுமம், நாதம், விந்து இவைகட்கெல்லாம் முதன்மையானது மாமாயை! சுத்த சூனியத்தினின்றும் பிரகிருதியின் (அணுவின்) தன்மை விலகினுல், அஃதாவது திரை அகற்றினுல் அரிய காட்சி காணலாம். இந்நிலையடைய உணர்வு எனும் சூட்சுமத்தை அறிதல் வேண்டும். வைணவ முதலான பல சமயங்கள் உணர்வு தத்துவம் வரை செல்கின்றன. சைவம், உணர்வுக்குமப்பால் கடந்து செல்கின்றது.

உணர்வு தத்துவத்தை முறைப்படி அறியாதாரும் அவரை அறியாமலேயே உணர்வு ஒன்றுபடுவதுண்டு. முறையாக அறிந்து ஒன்றியிருப்பவரை வாதனை அணுகாது குற்றவாளி விலங்கிடப்பட்டு அழைத்துச் சென்று நீதிபதி முன்னுல் விலங்கவிழ்த்து நிற்கவைப்பது போல, உணர்வு ஒன்றுபட்ட நிலையில் இயமனுல் ஏதும் செய்ய

வியலாது. இத்தகைய உணர்வை உலகியல் நிலையில் பயன்படுத்துபவர் அவ்வக் கலைகளில் வல்லுநர்களாக, உலகப் புகழ் பரவும் பேரறிஞர்களாகின்றனர். எடுத்துக்காட்டாக விஜயநகரப் பேரரசு புரிந்த காலத்தில் அப்பாஜி எனப்படும் அறிவிற் சிறந்த அமைச்சரின் சில நுண்ணறிவுச் செயல்களைக் காண்போம்.

கிருஷ்ணதேவராயரின் ஆட்சிக் காலத்தில் அமைச்சராகத் திகழ்ந்தவர் அப்பாஜி. அப்பாஜியின் அறிவுத் திறனுக்குத் தம்மை முழுவதும் ஒப்படைத்தார் கிருஷ்ணதேவராயர். அதனுல் பேரரசராக விளங்கினுர். பகை என்ற பேச்சுக்கே இடமில்லை. கிருஷ்ணதேவராயரின் புகழும் அதற்குக் காரணராய் விளங்கிய அப்பாஜியின் புகழும் வட இந்தியாவில் பரவலாயிற்று. அப்பாஜியின் அறிவுத் திறனைச் சோதிக்க எண்ணிய டில்லி மாமன்னர் கிருஷ்ணதேவராயருக்கு ஒரு கடிதம் எழுதினுர்; "தாங்கள் எம் உயிர் நண்பர் என்பதற்கு அடையாளமாக குடப்பூசுணை நடைகீரை, குழிகிணறு ஆகியவற்றை அனுப்பி வைக்கவேண்டும்" என்று எழுதப்பட்ட கடிதத்தைக் கண்ட ராயர் வியப்படைந்தார். அப்பாஜி! டில்லி மன்னர் வரைந்துள்ள கடிதம் எனக்குப் பெரு வியப்பாக இருக்கிறது! இதுவரை கேள்விப்படாத பொருள்களை அன்பளிப்பாகக் கேட்டிருக்கின்றுர்; நீரே படித்துப் பாரும் என கடிதத்தைக் கொடுத்தார் அப்பாஜியிடம்.

மதிநலம் படைத்த மாண்புமிகு அமைச்சரல்லவா அப்பாஜி? அக் கடிதத்தைப் படித்துவிட்டுச் சிரித்தார். அரசே! இதற்கு ஆவன செய்வோம் கவலை விடுக! என்றுர். இராயருக்கோ அப்பாஜி என்ன செய்யப் போகிறுர் என்ற வியப்பு! அப்பாஜி பணியாளரை வரவழைத்து, சிறு பிஞ்சுடன் கூடிய பூசுணைக் கொடியைக் கொண்டுவரச் செய்தார். அதனைக் குடத்தில் பொருத்தி காய்க்கவைக்குமாறு பணித்தார். மற்ருெருவரை அழைத்து, மொட்டை வண்டியின்மீது சிறந்த எருவுடன் கலந்த மண்ணைப் பரப்பச் செய்து பாத்தி பாத்தியாகக் கீரை விதைகளைத் தெளித்து நடைகீரை பயிராக்கச் செய்தார், அடுத்தது குழிகிணறு வேண்டுமே! டில்லி பேரரசுக்குக் கடிதம் ஒன்றை எழுதனுர். தாங்கள் விரும்பியவாறே குடபூசுணையும், நடைகீரையையும அனுப்பியுள்ளோம் குழிகிணறு எமது நாட்டிலுள்ளவைநும் நாட்டு மக்களுக்குப் புதுமையாக இருக்கும். எனவே அங்குள்ள குழி கிணறுகளுள் ஒன்றை மாதிரிக்கு அனுப்பிவைத்தீராஞல் அதைப் போலவே நாங்களும் அனுப்பிவைக்கிறேம் என்று எழுதப்பட்ட கடிதத்தையும் குடப்பூசுணை, நடைகீரை ஆகியவற்றையும் இராயரிடம் காண்பித்து அரசே! அருள்கூர்ந்து இவைகளை டில்லி பேரரசுக்கு அனுப்பி வைக்கவும் என்றுர்.

முள்ளை முள்ளால் எடுப்பதுபோன்று டில்லி மன்னரின் கடிதத்திற்கு ஏற்ப அமைச்சர் அப்பாஜியின் செயலைக் கண்டு மகிழ்ந்தார் ராயர். இத்தகைய அறிஞரை அமைச்சராகப் பெற்றமைக்கு அளவற்ற மகிழ்வெய்தித் தழுவிக் கொண்டார். அரசரின் ஆணைப்படி டில்லி மன்னருக்குப் பொருள்களும் கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டன.

தம் எண்ணத்தை யறிந்து அதற்கேற்ப செயல்புரிந்த அப்பாஜியின் நுண்ணறிவைப் பாராட்டிய டில்லி பேரரசர் கிருஷ்ணதேவராயருக்கு மீண்டுமொரு மடல் வரைந்தார். "தாங்கள் நான் விரும்பியவாறு அனுப்பிவைத்த பரிசுப் பொருள்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்

தேன். பதிலாக நான் தங்களுக்கு மூன்று வெண்கலச் சிலைகளை அனுப்பியுள்ளேன். அவற்றுள் முதல், இடை, கடைப்பட்டவரைக் குறிக்கும் சிலைகளின் தன்மையை அறிவிக்க வேண்டுகிறேன்'' என எழுதிய கடிதத்துடன் சிலைகளையும் அனுப்பிவைத்தார்.

கிருஷ்ணதேவராயருக்கு சிலைகளும் கடிதமும் வந்து சேர்ந்தன. ஒன்றைப்போலவே இருக்கும் மூன்று சிலைகளையும் பார்த்து வியப்படைந்து தன் அரசவையில் உள்ள அறிஞர்களிடம் விளக்கம் கேட்டார் ராயர். அவர்கள் விளக்கந்தர வியலாதவர்களானர்கள். ராயர் அப்பாஜியிடம் அவற்றை ஒப்படைத்து நீர்தான் உண்மையைத் தெளிந்து கூறவேண்டும்; இல்லையேல் டில்லி மன்னரின் இகழ்ச்சிச் சொல்லுக்காளாவோம் என வருத்தத்துடன் கூறினர். அப்பாஜி தன் கூர்த்த அறிவால் சிலைகளை உற்று நோக்கினர். அவரின் ஒன்றுபட்ட உணர்வு, சிலைகளின் காதுகளில் உள்ள சிறிய தொளையைச் சுட்டிக் காண்பித்தது! ஒரு மெல்லிய கம்பி எடுத்து ஒரு சிலையின் காதினுள் நுழைத்தார். அக் கம்பி வாயின் வழியாக வெளிவந்தது. மற்றொரு சிலையின் செவிக்குள் கம்பியைச் செலுத்தினர். அது நேராக மற்றொரு செவியின் வழியாக வெளிவந்தது. பிறகு மூன்ருவது சிலையின் காதினுள் நுழைத்தார். அக் கம்பி வாயின் வழியாகவோ செவியின் வழியாகவோ வாராமல் தடைப்பட்டு நின்றது.

அமைச்சர் அப்பாஜிக்கு சிலைகளின் தன்மைகள் விளங்கிவிட்டன. அரசே! செவிவழி கேட்ட செய்திகளை மனத்தில் இருத்தி வைக்காமல் உடனே சொல்பவன் மக்களுள் கடைப்பட்டவன். ஒரு காதில் கேட்டு மறுகாதில் விட்டுவிடுபவன் இடைப்பட்டவன். கேட்டவற்றை வெளிவிடாமல் உள்ளத்திலிருத்தி சிந்திப்பவனே மக்களுள் முதல்தரமானவன். இவ்வுண்மைகளை அவ்வச் சிலைகளின் கீழ்ப் பக்கத்தில் எழுதி டில்லி அரசுக்கு அனுப்பிவையுங்கள் என்ருர். அரசரும் அவையோரும் அமைச்சரின் மதிநுட்பத்தினைப் பெரிதும் பாராட்டிப் போற்றினர். அரசர் அப்பாஜி கூறியவாறே விளக்கம் எழுதப்பட்ட சிலைகளை டில்லி அரசருக்கு அனுப்பிவைத்தார்.

உண்மை விளக்கம் மாறுபடாமல் எழுதப்பட்டிருந்ததைக்கண்ட டில்லி மாமன்னர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார். அமைச்சர் என்ருல் அப்பாஜியைப்போலன்ரே அமைய வேண்டும்! என பேருவகை கொண்டு அப் பெரியாரை அவசியம் நேரில் சந்திக்க வேண்டுமென ஆவல் கொண்டார் தமது விருந்தினராக அப்பாஜியை அனுப்பி வைக்க வேண்டுமென கிருஷ்ணதேவராயருக்கு மடல் அனுப்பினர். கிருஷ்ணதேவராயரின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. நம்முடைய அவை அமைச்சருக்கு டில்லி பேரரசின் வரவேற்பு நமக்கன்ரே பெருமை என்று மகிழ்ந்தார். அப்பாஜியிடம் கடிதத்தின் செய்தி கூறி மனமுவந்து அனுப்பி வைத்தார்.

மன்னரின் அன்புக் கட்டளையேற்றுப் புறப்பட்ட அப்பாஜி டில்லி சேர்ந்தார். அப்பாஜியின் பெருமையும் அவரின் வருகையும் டில்லி மக்களிடம் பரவலாகப் பரவியது. அனைவரும் திரளாக அப்பாஜியைக் குதூகலத்துடன் வரவேற்றனர். விருந்தினர் மாளிகையில் தங்கி ஓய்வு பெற அவருக்கு அரச மரியாதைகளுடன் அனைத்து வசதிகளும் கிடைத்தன. பின்னர் அரசவை நோக்கிப் புறப்பட்டார். டில்லி மன்னருக்கு அப்பாஜியின் திறனை நேருக்கு நேர் சோதிக்க வேண்டும்

என அவா எழுந்தது. தன் பணியாட்களுள் ஒருவருக்கு அரச உடை அணிவித்து அரியணையில் அமரச் செய்தார். அமைச்சர் போல ஆடை அணிந்து கொண்டு அமைச்சர்களுக்கிடையில் தான் அமர்ந்து கொண்டார். இச்செயல் அவையோருக்குப் பெரு வியப்பாக இருந்தது. என்ன நடக்குமோ என ஆவலுடன் கூர்ந்து நோக்கினர்.

அப்பாஜி அவையுள் நுழைந்தார். ஒரு கணம் அவருடைய பார்வை அவையைச் சுற்றிச் சுழன்றது. அரியணையில் அமர்ந்திருந்த வரையும் பார்த்தார். நேராக அமைச்சர்கள் அமர்ந்திருந்த இடம் நோக்கி நடந்தார். அமைச்சர் வேடந்தரித்திருந்த மன்னரைப் பணிந்து மன்னர் பெருமானே வணக்கம்! என்று பணிவுடன் நின்றார். அரசர் திகைத்தார்! அவையோரும் வியந்தனர். அறிவு சான்ற அமைச்சர் பெருந்தகையே! உம்முடைய அறிவுத்திறனை நேரில் கண்டு களிக்கவே இந்நாடகமாடினேன், நீர் என்னைக் கண்டுபிடித்ததெவ்வாறு? என்று கேட்டார். மன்னர் மன்னவா! இது வியப்புக்குரிய அரிய செயலன்று! அவையுள் நுழைந்ததும் ஒரு கணம் நோக்கினேன் அரியணையில் அமர்ந்திருந்தவரை எவரும் பாராமல் தங்களையே வியப்போடு நோக்கியிருந்தனர். இதனின்றும் தங்களைக் கண்டறிந்தேன் என்றார்.

இதைக் கேட்டதும் பெரு மகிழ்வெய்திய மன்னர், அமைச்சரே! உம்முடைய நுண்ணறிவுத் திறனுக்கீடாக கொடுக்கும் பரிசுப் பொருள்கள் எம்மிடமில்லை! எனினும் எம்மால் வழங்கப்படுகின்ற அன்புப் பரிசில்களை ஏற்றுக்கொண்டு சில காலம் எம்முடன் அரசவை விருந்தினராகத் தங்கிச் செல்லல் வேண்டும் என கோரினார். அவரின் வேண்டுகோளை ஏற்ற அப்பாஜி சிலகாலம் தங்கி இருந்து, பின்னர் விடைபெற்று விஜய நகரம் திரும்பினார்.

வெற்றி வாகைசூடி திரும்பிய அமைச்சருக்கு விஜயநகரப் பெரு மக்கள் குதூகலமான வரவேற்பளித்தனர். அப்பாஜி ராயரைக் கண்டு வணங்கி நிகழ்ந்தவற்றை விளக்கமாகக் கூறினார். செவிகுளிரக் கேட்டு மகிழ்ந்த இராயர் அப்பாஜியால் தம் நாட்டின் பெருமை உயர்ந்ததை நினைந்து மகிழ்ந்து தழுவிக்கொண்டார்.

இயற்கையாகவே ஒன்றுபடும் உணர்வை, எஞ்ஞான்றும் ஒரு நிலையில் நிறுத்தி இறை நெறிக்குத் திருப்ப வழியறியாதார் உலக நெறியில் மட்டுமே பெயரும் புகழும் எய்துகின்றனர். வழியறிந்து ஒன்று திரண்ட உணர்வை உள்முகமாக திருப்புவோர் இகம், பரம் இரண்டினிலும் புகழுடம்புடனே வாழ்வர்! இத்தகையவரையே சான்றோர் எனவும், அருளாளர், மகான்கள் எனவும் போற்றுகின்றோம். ஏனையோரை அறிஞர் என அழைக்கின்றோம்.

தாயுமான அடிகளார், தான் பெற்ற உணர்வு பலத்தை உலக நெறிக்கு மட்டுமே பயன்படுத்தாமல் இறை நெறிக்கும் செலுத்தினார். சோதியாகிய பரம்பொருளை விளித்த சுவாமிகள், "உலக மாயையிலே எளியேன் தனை உழலவிட்டனையே உடையாய்! அருள் இலகு பேரின்ப வீட்டினில் என்னையும் இருத்திவைப்பது எக்காலம் சொலாய்" எனக் கேட்கின்றார்.

பிரணவ (ஓங்கார)த் தத்துவத்தை அறிந்தால் பேரின்ப வீடு அடையலாம் அடிகளாரின் ஆசை, "சாலக் கபாட தடைதீர எம்பெருமான் ஓலக்க மண்டபத்துள் ஓடும்நாள் எந்நாளோ?" என்பதாகும்.

அஃதாவது, மிகுதியான மாயா காரியம் எனும் தடையானது நீங்க எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவோலக்க மண்டபத்துள் திரிந்து கொண்டிருக்கும் நாள் எந்த நாள்? என்பதாகும். உணர்வு எனும் பெரும் பதம் தெரிந்து நாடுபவர் வைணவராயின் வைகுந்தப் பதவிக்கும், சைவராயின் சிவலோக பதவிக்கும் இப் பிறவியிலேயே சென்று வரலாம்!

இந்நிலைக்குத் தடையாயுள்ள மாயை, வினைகளைத் தவிர்த்து உளம் நெகிழ்ந்து உணர்வு ஒன்றுபட்டு இருக்க மோனமெனும் உபதேச வாளைக் கொடுத்தருள்வாய் என அருணகிரிநாத அடிகளார் சோம நாத மடமேவி யிருக்கும் முருகப் பெருமானை வேண்டுகின்றார்;

ஒருவழிப டாது மாயை இருவினைவி டாது நாளும்
உழலுமநு ராக மோக அநுபோகம்
உடலுமுயிர் தானு மாயுன் உணர்விலொரு காலி ராத
உளமுநெகிழ் வாகு மாறு அடியேனுக்
கிரவுபகல் போன ஞான பரமசிவ யோக தீர
மௌனமொழியும் வீசு பாச கனகோப
எமபடரை மோது மோன வுரையிலுப தேச வாளை
எனதுபகை தீர நீயும் அருள்வாயே
அரிவையொரு பாக மான அருணகிரி நாதர் பூசை
அடைவுதவ ருது பேணும் அறிவாளன்
அமணர்குல கால னாகும் அரியதவ ராஜ ராஜன்
அவனிபுகழ் சோம நாதன் மடமேவும்
முருகபொரு சூரர் சேனை முறியவட மேரு வீழ
முகரசல ராசி வேக முனிவோனே
மொழியுமடி யார்கள் கோடி குறைகருதி னாலும் வேறு
முனியஅறி யாத தேவர் பெருமாளே

தாயுமான அடிகளாரின் வேண்டுகோளாவது; சக்தியானவள் கண்குளிரக் காணுமாறு அடியவர்கட்கெல்லாம் வினை தீர்த்தற்பொருட்டு கொடிகட்டி ஆடும் பெருமானே! ஏழையாகிய எளியேனைமட்டும் உலக மாயையிலே உழலவிட்டனையே! என்னையும் நின் நாடகத்தைக் கண்டு களிக்குமாறு திருவருள் புரிவது எந்த நாள்? என்பதாகும்.

''திருப்புகழ் அருணகிரி''

சென்னை தங்கசாலைத் தெரு, திருச்சீரலைவாய் சண்முகவேல் சபையின் 40ஆவது ஆண்டு கந்தர் சஷ்டி விழாவில், 3—11—78 வெள்ளிக்கிழமை மாலை 6 முதல் 9 மணிவரை ''யோகாசன ஆலய விஜயம்'' ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்கள் ''திருப்புகழ் அருணகிரி'' என்னும் பொருளில் இசைச் சொற்பொழிவு ஆற்றினார்கள். ஆலய அன்பர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழா அமைப்பாளர் திரு. K. கன்னியப்பன் R. I. M. P. அவர்கள் ஆலயத்தை கௌரவித்து மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டனர்.

WINGS OF DIVINE WISDOM

by YOGI SIVALINGAM—U. S. A.

Oh dear! look inwards which is all of yours, which gives great storage of True knowledges,

Oh dear! look within, see lying the bottom of the God head of the Golden rules and Heart-thoughts which lift you by the grace of the Guru,

Oh dear! watch always, then there is no sickness,

Oh dear! control the talkatives,

Oh dear! watch always for your Spiritual knowledges,

Oh dear! find inwards for reminding you what you have from the last life's treasures,

Oh dear! Bear it, keep it, do it, aware for all it,

Oh dear! fight with the demons of the weakness and prouds of the weakness,

Oh dear! control the anger by the Grace of the Spiritual practices,

Oh dear! fight with your mind which is called bondage of the book knowledge and comparings,

Oh dear! Sleep and thoughts with HIM,

Oh dear! work with HIM,

Oh dear! live with HIM,

Oh dear! leave with HIM,

Oh dear! there is no fear of the war with the mind of the darkness.

Much controlling is the way to purify the nerves current,

Nerves purification way, you can enter the house of the Divinity,

Nerves purification way, you can enter the house of the Divine forms,

Nerves purification way to enter Ashram of the Divine powers,

Nerves purification way to enter Power house of the Astral-World,

Nerves purification way to enter Elixir-divine of the God's Soul,

Awake earlier, think of HIM,

Awake inner-sound with the AUM,

Awake always with HIM by the WILL,

Be devoted with HIM and find within HIS heart by the Grace of the GURU.*

பதார்த்த குண போதினி

மூலிகை குணனுபவத்தை விளக்கும் சிறந்த நூல்

வைத்திய ரத்தினம் வி. பலராமய்யா, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட நீதிபதி (ஓய்வு)

வேப்பெண்ணெய் :—மகா வாதங்களுக்கு பூண்டு, கோழி முட்டை, மயிலிறகு முதலியன சேர்த்துக் காய்ச்சி மேற்பூச்சாகத் தடவலாம. குழந்தைகள் மாந்தத்துக்கும உபயோகிக்கலாம. கரப்பான், புண முதலியவைகளுக்கு எட்டிக் கொட்டைகளை நறுக்கி இந்த எண்ணெயில் போட்டு காய்ச்சி, எட்டிக் கொட்டை மிதக்கும் சமயத்தில் எடுத்துத்தடவ, மண்டை கரப்பான, புண், புறை நீங்கும்.

இலுப்பெண்ணெய் :—சகல வாதங்களுக்கு மேற் பூச்சாகப் பூசக் கூடியது. சிரங்கு, விரணம், கரப்பான் முதலியவை நீங்கும். நாகத்தைச் சுத்தி செய்யும்.

புன்னை எண்ணெய் :—சகல வாதங்களுக்குச் சிறந்தது. கரப்பான், ரணம முதலயன ஆற்றும், புன்னைக் காயினுள்ளிருக்கும் பருப்பை நெருப்பில சுட்டுக் கருகியபின நன்ருக அரைத்து வெண்ணெய்போலான பிறகு கொடிய கால கரப்பான், மண்டைக கரப்பான்மீது மேலும் மேலும பததுப்போட வெகு சீக்கிரத்தில் குணமாகும்.

புங்கன் எண்ணெய் :—இதுவும் புண், புறை சிரங்குகளுக்குச் சிறந்தது.

தேங்கா எண்ணெய் :—இதுவும் மேற்சொன்ன குணங்களைத் தரும்

கடுகு எண்ணெய் :—வாதங்களுக்கு மேற்பூச்சாகத் தடவ சிறந்த பலனைத் தரும, வீக்கங்களைக கரைக்கும்.

நீரடிமுத்தெண்ணெய் :—இதுவும் கிரந்தி, புடை, குஷ்டம் முதலியவைகளுக்கு மேற்பூச்சாகப் பூசலாம்.

சேங்கொட்டை எண்ணெய் :—இதை அதிஜாக்கிரதையாய் உபயோகிகக வேண்டும். மருததுவத்தில பல நோயகளுக்கு உபயோகிக்க கூடியது. சொறி, கரப்பான, குஷ்டம், கடுஞ் சொறி முதலிய நோய்களை போக்கும்,

முக்கூட்டு நெய் :—எள்ளெண்ணெய், பசு நெய், ஆமணக்கெண்ணெய் - இவைகளைச் சம அளவு கூட்டிப் பக்குவமாகக் காய்ச்சி தலையில் தேய்த்து வெந்நீரில் ஸ்நானம் செய்ய திரிதோஷங்களால் வரும சகல ரோகமுந் தீரும.

ஐங்கூட்டு நெய் :—ஆமணக்கெண்ணெய், எள்ளெண்ணெய் வேப்பெண்ணெய், புன்னை எண்ணெய், புங்கன் எண்ணெய் இவைகளைச் சம அளவு காய்ச்சி சன்னிகளுக்கு, கை கால் மார்புகளில் தேய்த்துவிட உடனே குணமாகும். 10 சொட்டுகள் உச்சித் தலையிலும் தேய்த்துவிடலாம். உள்ளுக்கும் தேக்கரண்டியளவு கொடுக்கலாம, மகா வாதங்களுக்கு மேற்பூச்சு செய்ய நல்ல குணம் தரும.

சாண வகை

பசுஞ் சாணம்:—பசுவின் பால், தயிர், நெய், மூத்திரத்துடன் சாணத்தைப் பிழிந்த பால் 5 சொட்டுகள் கலந்து சாப்பிட உடல் சுத்தியாகும், கிருமிகளை அழிக்கும். அக் காரணத்தைக்கொண்டே வீடுகளை இச் சாணத்தைக்கொண்டு சுத்தி செய்வார்கள்.

எருமைச் சாணம்:—ரத்த வாந்தியாகும்போது இச் சாணத்தை துணியிலிட்டுப் பிழிந்து தேக்கரண்டியளவு அப் பாலை எருமை தயிர் அல்லது மோரில்விட்டு சாப்பிட உடனே ரத்த வாந்தி நிற்கும். காமாலையும் குணமாகும்.

கழுதை சாணம்:—காமாலைக்கு இச் சாணத்தைப் பிழிந்து 5 சொட்டுகள் எருமைத் தயிரில் அல்லது மோரில்விட்டு உள்ளுக்குக் காலை மாலை கொடுக்கவும். அதிசீக்கிரத்தில் குணமாகும். உப்பில்லாமல் நீராகாரங்கள் சாப்பிட வேண்டும்.

முயல் சாணம்:—காட்டு முயல் சாணப் புழுக்கையில் மூன்று எடுத்து பிரவிடையான மூன்று நாட்கள், காலை மாலை பசும்பாலில் சாபபிட கர்ப்பத் தடை உண்டாகும். இப்படி மூன்று முறைகள் சாப்பிட மலடியாவாள்.

வெள்ளாட்டுச் சாணம்:—இதையும் அன்ன பேதியையும் சேர்த்து வெள்ளாட்டு மூத்திரத்தைவிட்டு அரைத்து புடம்போட அன்ன பேதி சுண்ணமாகும்.

மூத்திர வகை

சிறுநீர்:—குழந்தை பிறந்த மறுநாள், ஆண் குழந்தையாயின் பெண் குழந்தையின் சிறுநீர், பெண் குழந்தையாயின ஆண் குழந்தையின் சிறுநீர் ஒரு தேக்கரண்டியளவு ஒருவேளை கொடுப்பதுண்டு. இதனால் செவாப்பு, கருஞ் செவாப்பு முதலியன குணமாகும். சிறுநீர் பிடிக்கும் குழந்தை 5 வயதுக்குள் இருக்க வேண்டும். இது காயசித்தி அளிக்குமென்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதை சாப்பிட்டு சீக்கிரத்தில் இறப்பவர்களையே நாம் கண்டதுண்டு. சித்தர்கள் சொன்ன காயசித்தி மனிதனுடைய சாக்கடை நீரென்று சொல்லும மூத்திரமல்ல.

பசு மூத்திரம்:—இதில் கடுக்காய் தோலை ஊறவைத்து நன்குக ஊறியபின் எடுத்து இடித்து சூர்ணம் செய்துகொண்டு காலை மாலை தேக்கரண்டியளவு உள்ளுக்குக் கொடுக்க, பாண்டு, பெருவயிறு, காமாலை, வயிற்றில் கிருமிகள் நாசமாகும.

வெள்ளாட்டு மூத்திரம் இதே குணங்களைத் தரும்.

குதிரை மூத்திரம்:—பாதத்தில் வரும் புற்று நோயைக் குணப்படுத்தும், பஞ்சில் நனைத்து மேலே போட கிருமிகள் செத்து புண் குணமாகும்.

கழுதை மூத்திரம்:—இதை தேக்கரண்டியளவு காலை மாலை சாப்பிட சுரந்த, காசம்; இரைப்பு, குஷ்டம், உட்சூடு, வீரிய நஷ்டம இவைகளைப் போக்கும்.

YOGASANAS

Translated version of Mr. E. S. Rangaswami's

A great exponent of Yagasanas

By Sri R. Meharbabu, B.Sc., M.A., B.T.

(Continued from previous issue)

PACHCHIMOTHASANA

Pachchimothasana: Lye down on Carpet facing the sky stretch your legs perfectly by keeping the toes together. Stretch your hands on the carpet beyond and through the sides of your head. Release your breathings and inhale as much air as possible and raise your hands, head and chest except hip and legs by controlling the breath and sit The hands should not be bent. Bend your head and chest till you catch hold of the toes with the help of index finger and centre finger by releasing the breath slowly. Legs should not be bent and at the same time try to place your head over the knees by keeping the elbows on the sides of the legs. It is very difficult at first to keep the head over the knees, without hending the legs. But it will be very easy after regular practice. To Young boys and girls it is very easy. But the benefit of this asana is very magnificent. Slowly release your holdings and lye down as before. Take a few minutes rest and repeat this exercise two to three times.

This exercise may also be practised step by step daily and make it more easy. At first the practioner has to lye down stretching the limbs. Then he has to sit without bending his legs. When this is made easier, he has to touch the toes with his fingers. Lastly head should be brought closer to the knees by keeping the hands on either sides of legs. In this manner this can be done very easily. By doing this regularly, one will get happy and comfortable peace of mind. First of all he secures healthy life. With this he gets full peace of mind. One who suffered a long time, will secure gradual happiness and peace of mind. By doing this asana regularly it makes him to astonish himself. This is quiet common. It is better to know the benefit of this asana. We all aware of the dreadful disease-Cancer. Even in this wonderful Scientific Century of space age, physicians are unable to cure the disease. In fact almost all cases have become fatal. In Ayurveda's Sulurutham. We find some explanations regarding this dreadful disease. In Yogasastra it is said, that not only cancer but diseases like leprosy etc., could easily be cured. True to the tune of many ailing patients it is also believed that Pachchimothasana cures cancer if present, or once for all it will never approach a man who practices it. Blood absorbs the digested food particles and it is circulated to the entire body, but

the three great and important pulsatory veins penetrates deep into the spleen and produces sugar, bile and glycogin and it is stored in the liver. Again these substances are carried by the pulsatory veins to the entire body when required. Some times without our knowledge we eat certain nondigestible poisonous things. It is due to carefree life and foolishness. For example meals prepared out of faded, non tin coated vessels, aluminium vessels, dishes that contains too much of tamarind and chill, intoxicants like alcohol, arrack, western liquors, norcotics like hashish, bung etc., are poisonous. These poisonous matter is absorbed along with food and it is taken to spleen by blood vessels. There, they form virus and these virus are carried from spleen to different parts of the body, If they come into contact with soft fleshy organs they attack the tissues of the organs and forms incurable wound. This disease is called cancer. So cancer may form in any part of the body.

From the above fact, we have learnt that the starting point of the terrible disease is spleen. Since spleen is unable to digest the poisonous matter they are changed into virus and forms cancer and this spread to other parts of the body. If spleen is made strong and active, it will be able to digest all the matter that comes to it. For that Yogasanas are the better masters. By doing Pachchimothasana, spleen and other digestive organs like pancreas, stomach, intestine, colons etc., are pressed and reinforced. Due to this they function effectively.

TOBACCO LICKS THE LIPS BUT BITES THE LUNGS

KALPA

8. So sit in a corner and think about the above facts. It is in your hands to overcome the habit of smoking in order to become an active, happier person to your family, to Society and to Nation. By adhearing to undermentioned you can get out of the habit.

Keep away with your friends smokers at the time of smoking
Smoke fewer cigarettes each day
Reduce the number of puff on each cigarette.
Take slow drags and don't inhale deeply
Take a will not to smoke till you go to a temple and return back to your home.
Determine not to smoke - even the one - before your children
Buy one or two cigarettes instead a full pack
Join a good Sath Sangam to get rid of the habit
Cultivate will power
Think a while whether your family should share the miseries by your bad habit - smoking
Housewives should give strong warnings to their smoking husbands.

யோகாசன ஆலய சிறப்பு நிகழ்ச்சிகள் !

விருதுநகர்

விருதுநகருக்கருகிலுள்ள சொக்கநாதன் புத்தூர் அருள்மிகு அன்னை மாரியம்மன் கோவில் புரட்டாசித் திருவிழாவின் ரத உசற்வ வெள்ளி விழாவை முன்னிட்டு, 13—10—78 இரவு 6-30 முதல் 11 மணிவரை, இளைஞர் கபடி விளையாட்டு மன்றத்தின் சார்பாக யோகாசன ஆலய விருதை அன்பர்களால் தெய்வீகச் சொற்பொழிவும், பக்திப் பாடல் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

யோகாசன ஆலய விருதை மகளிர் பிரிவு செயலர் திருமதி K. மகமாயம்மாள் தலைமை வகித்தனர். அன்பர்கள் ஒவ்வொரு தலைப் புகளில் உரையாற்றினர்கள்; திரு. ஆ. பாண்டி B. A. F. F. I. I.— "நாகாத்தலும் சோகாத்தலும்", திரு. P. தங்கராஜ்—"திருநீலகண்டர்." திருமதி மீராதேவி தியாகராஜன்—"சக்குபாய்," திருமதி C. வசந்தா தேவி—"பாவபுண்ணியம்," தள்வை திரு. சா. முத்துராஜ்—"பக்தி," திருமதி A. ஜானகியம்மாள், முகவூர் திரு. சொக்கலிங்கம் பிள்ளை ஆகியோர் பஜனையும், பக்திப் பாடல்களும் பாடினர்.

சொக்கநாதன் புத்தூர் அன்பர் திரு. த. முத்தையா அவர்கள் அனைவரையும் வரவேற்றனர். இளைஞர் கபடி மன்றத் தலைவர் திரு. த. மாரியப்பன் நன்றி கூறினர். முகவூர் யோகாசன ஆலய கிளை அன்பர்கள் இந் நிகழ்ச்சியை அமைத்துக் கொடுத்தனர்.

ஸ்ரீ காமராஜ் நினைவு இல்லத்தில் யோகாசன ஆலய கிளை !

விருதுநகர் சுலோசன நாடார் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ K. காமராஜ் நினைவு இல்லத்தில் 22—10—78 ஞாயிறு மாலை 6 மணிக்கு, யோகாசன ஆலய கிளை தொடங்கப்பட்டது. யோகாசன ஆலய விருதை கிளை செயலாளர் திரு. S நடராஜன் அவர்கள், அனைவரையும் வரவேற்ருர். யோ. ஆலய விருதை கிளை மகளிர் பிரிவு செயலாளர் திருமதி K. மகமாயம்மாள் அவர்கள் மகரிஷி தாயுமானவரின் 'அங்கிங்கெனுதபடி' என்று தொடங்கும் முதல் பாடலுக்கு விரிவுரையாற்றினுர்கள். பிரார்த்தனைக்குப் பின்னர் கூட்டம் இனிது நிறைவு பெற்றது. தொடர்ந்து வாரந்தோறும் வேதாந்த வகுப்பு ஷி இடத்தில் நடைபெறும்.

S. நடராஜன்.

திருவொற்றியூரில் "முருகன் பெருமை"

சென்னை திருவொற்றியூர் அருள்மிகு தியாகேசுவரர் திருக்கோயிலில், 31—10—78 அன்று, அருள்மிகு வடிவுடையாள் வரம்பெறும் அருள்நெறித் திருக்கூட்டச் சபையின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கந்தர் சஷ்டி விழாவில், யோகாசன ஆலய அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன் அவர்கள் "முருகன் பெருமை" எனும் பொருள்பற்றி மாலை 4 முதல் மணிவரை சொற்பெருக்காற்றினுர். தொடக்கத்தில் சமூகப் பிரமுகர் திரு. N. R. வீரஜின்னு செட்டியார் அவர்கள் அனைவரையும் வரவேற்று, யோகாசன ஆலயம் ஆற்றிவரும் அரிய ஆன்மீகத் தொண்டுபற்றி பாராட்டியும் விளக்கியும் பேசினர்.

சிறப்பு நிகழ்ச்சி

சென்னை நங்கநல்லூர் இந்து காலனியில், யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்களின் புதுமனையில், 22—10—78 ஞாயிறன்று சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. காலை 9 முதல் 10-30 மணிவரை பிரசாரகர் செல்வி R. சாந்தி B.Sc., இசைப் பிரிவு செயலர் திருமதி காளீஸ்வரி வைரவன், மற்றும் மகளிர் குழுவின ரால் இன்னிசை நடைபெற்றது. 10-30 மணிக்கு பொதுச் செயலர் C. இராமசுவாமி அவர்கள் வேத வேள்வி வளர்த்தனர். 'பின்னர் திருமதி வசுந்தரா முருகேச பாண்டியன், திருவாளர்கள் V. . கெங்கு ராஜ், N. குருலிங்கம், T S. கலியாணசுந்தரம், புலவர் பா. ஆழ்வார், பி. வெங்கடேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்கள். திருவாளர் A. S ஆதிநாராயணன் அவர்கள் வரவேற்பும், திரு S. முருகேச பாண் டியன் அவர்கள் நன்றியும் கூறினர்.

இந்து அலுவலக தொழிலாளர்கள் திருமண மண்டபத்தில் அனை வர்க்கும் விருந்தோம்பல் நடந்தது.

பிற்பகல் 3 முதல் 4-30 மணிவரை யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் சாதனை வகுப்பு நடாத்தி வைத் தனர். பிரார்த்தனைக்குப்பின் திரு. S. K, மலைக்கனி அவர்கள் நன்றி நவின்றுர். அனைவர்க்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. திருவாளர்கள் A. S. ஆதிநாராயணன் S. K. மலைக்கனி ஆகியோர் நிகழ்ச்சிக்குப் பெரும் பங்கு கொண்டனர்.



சென்னை இராயபுரம் அருள்மிகு மன்னுர்சாமி கோவிலில்
3—9—78 அன்று நடைபெற்ற "பெரிய புராண"
சிறப்புக் கூட்டத்தின்போது எடுத்த படம்.

இடமிருந்து வலம்:—சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு திருப்பூர் மணிமாறன், அறநிலைய துணை அமைச்சர் மாண்புமிகு ஐசரிவேலன் M.L.A., யோகாசன ஆலய அமைப்பாளர் திரு. பி. வெங்கடேசன், பெரிய புராணம் "திருநாளைப் போவார்" வரலாறு உரை நிகழ்த்துபவர் புலவர் திரு. பா. ஆழ்வார் 'யோகாசன ஆலய விஜயம்' ஆசிரியர்.

திருமணம்

விருதுநகர் திரு. K. A. P. R. ராஜப்ப நாடார், திருமதி R. சீதா லக்ஷிமி (யோகாசன ஆலய உறுப்பினர்) அவர்களின் மகன் திருவளர் செல்வன் சந்திரசேகரன் B.A., B.Sc., அவர்கள், விருதுநகர் திரு. B. அருணாசலம் B.A , B.L., திருமதி ரத்தினகாந்தி அவர்களின் மகள் திருவளர் செல்வி உஷா பாக்ஷிணியை இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் திருமண விழா 3-11-78 வெள்ளிக்கிழமை காலை 8-45 மணி அளவில், விருதுநகர் V. V. S. கலியாண மண்பத்தில் வெகு விமரிசை யாக நடைபெற்றது. அவ்வமயம் யோகாசன ஆலய அன்பர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி பிரார்த்தனை படம் அன்பளிப்பு அளித்தனர். மற்றும் உறவினர் நண்பர்களும் மணமக்களை வாழ்த் தினர். மணமக்கள் சார்பாக யோகாசன ஆலய விஜயம் ' வளர்ச்சி''க் காக ரூ. 51 நன்கொடை வழங்கப்பட்டது.

* * *

வடசென்னை யோகாசன ஆலய கிளைகள் மேற்பார்வையாளர் திரு. S. K. மலைக்கனி அவர்களின் இளவலும், பந்துவார்பட்டி சு. கருப்பசாமி நாடார் - ஆனந்த வள்ளியம்மாள் ஆகியோரின் மகனு மாகிய நிறைநாட்செல்வன் சுப்புராஜாவுக்கும், புதுச்சூரங்குடி திரு. கு. ராஜமணி நாடார் அவர்களின் மகள் நிறைநாட்செல்வி இன்னுசி என்கிற மல்லிகாவுக்கும் 12—11—78 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் திருமணம் நிகழ்ந்தது. இராமநாதபுரம் மாவட் டம் சாத்தூரை அடுத்துள்ள புதுச்சூரங்குடி மணமகள் இல்லத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் தலைமை வகித்து வாழ்த்தியருளினர். ''யோகாசன ஆலய விஜயம்'' ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தனர். யோகாசன ஆலய வடசென்னை கிளைகள் மேற்பார்வையாளர் திரு V நரசிம்மலு, விருது நகர் மேற்குப்பகுதி யோகாசன ஆலய கிளைச் செயலர் திருமதி மீராதேவி தியாகராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ' யோகாசன ஆலய விஜயம்'' மேனேஜர் திரு. S. கண்ணப்பன் அவர்கள் வாழ்த்து மடல் வாசித்தளித்தனர் யோகாசன ஆலய விருதுநகர் மகளிர் பிரிவு செயலர் திருமதி K. மகமாயம்மாள், மௌன வகுப்புச் செயலர் திருமதி சுந்தரம்மாள் சங்கரலிங்க நாடார், திரு. ஆறுமுக நாடார் ஆகியோர் மண விழாவில் கலந்து கொண்டு மகரிஷி தாயுமானவர் பாடல் புத்தகத்தை விருதுநகர் கிளை சார்பாக அன்பளிப்பு அளித்தனர். மணமகனின் தமயனுர் திரு. S. K கனிராஜன் அனைவரையும் வரவேற் ருர். திரு. S K. மலைக்கனி நன்றி நவின்ருர். திருமதி பாலகிருஷ்ண வடிவு மலைக்கனி அவர்கள் பிரார்த்தனை பாட விழா சீரும் சிறப்புமாக நிறைவேறியது. மணமக்கள் சார்பாக ''யோகாசன ஆலய விஜயம்'' வளர்ச்சிக்கு ரூ. 100 நன்கொடை வழங்கப்பட்டது.

புதுமனை புகுவிழா

பம்பாய் Dr. C. P. கோபாலராமன் Ph. D. M. Sc., (யோகாசன ஆலய நூல் நிலைய செயலர் திரு. V. A கெங்குராஜ் அவர்களின் சட் டகர்) அவர்களின் புதுமனை புகுவிழா 29—10—78 முற்பகல் 10 மணி யளவில் ஆதம்பாக்கம் மோகனபுரியில் நடைபெற்றது. யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் வேத வேள்வி நடாத்திவைத்து ஷெ குடும்பத்தினரை வாழ்த்தினுர்கள். யோகாசன ஆலய பொதுச் செயலர் திரு. C. இராமசுவாமி, தென்சென்னை செயலர் திரு. I. S. கலியாணசுந்தரம், ''யோகாசன ஆலய விஜயம்'' ஆசிரியர் புலவர் திரு. பா. ஆழ்வார் மற்றும் அன்பர்கள் பலரும், உற வினர் நண்பர்களும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். விழா நினைவாக ஷெ குடும்பத்தினர் ''யோகாசன ஆலய விஜயம்'' ஆயுள் உறுப்பினராக சேர்வதற்கு ரூ. 50 வழங்கினர்.

Regd. No. M. 5264 Yogasana Alaya Vijayam

ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போய் அஞ்செழுத் தாமே.

மிகப் பழமையானதாகிய வேதங்கள், ஓங்காரத்துடன் கூடிய ஐம்பத்தோ ரெழுத்துக்களாலாகியவையே யாகும். ஆகமங்களும் அவ் வகைத்தே. இவ்வெழுத்துக்களாலாகிய பயனை உணர்ந்தபின் இவை யனைத்தும் ஒடுங்கி ஐந்தெழுத்தே நின்று நிலவி முதன்மைபெறும்.

—திருமந்திரம்,

சந்தாதாரர்களுக்கு!

அன்புடையீர்!

சென்னை மாநகரில் வீட்டு எண்கள் மாற்றப் பட்டமையால் தங்கள் வீட்டின் புதிய எண்ணைத் தபால் அட்டையில் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும். முகவரி மாறினாலும் உடன் தெரிவிக்கவும்.

1978 ஜனவரி மாதம் செலுத்திய சந்தா டிசம்பருடன் முடிவடைவதால் 1979-ஆம் ஆண்டின் சந்தா தொகையை அன்பர்கள் 31—12—78க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

அருண்குமார் N. படேல், (வெளியிடுபவர்)
" யோகாசன ஆலய விஜயம் "
462, T. H. ரோடு, சென்னை-600 021.

S. கண்ணப்பன், மேனேஜர்,

Published by Sri Arun Kumar N. Patel, 462, T. H. Road, Old Washermenpet, Madras-600021. Editor Pulavar Sri B. Alwar, 464, T. H. Road, Old Washermenpet, Madras-600021. Printed by Sri C. M. Sivaraman, at T. G. Sambandam & Co., Counian Press, 169, (41) Broadway, Madras-600 001.
(November-1978)